கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.82-2020** தேதி**: 24.03.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (குப்புசாமி, த/பெ.தனபால்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**:**

(1) நான் வழக்கு சொத்தை வா.த.சா.ஆ 1 ன் மூலம் கிரையம் பெற்றுள்ளேன் என்றாலும் அதில் உள்ள சர்வே எண் அளவீடுகள் மற்றும் சக்குபந்தி சரியானது என்றாலும் சரிதான். வா.த.சா.ஆ 1 ல் கண்டுள்ள சொத்துக்களுக்கு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் பிராதில் கண்டுள்ள சொத்து விவரம் சரியானது தான் என்றாலும் சரிதான். வா.த.சா.ஆ 1 ன் சக்குபந்தியில் குறிப்பிட்டுள்ள ராஜலட்சுமி எனது மணைவி என்றால் சரிதான். அதேபோல் வா.த.சா.ஆ 1 ன் சக்குபந்தியில் குறிப்பிட்டுள்ள மோகன் ராஜ் இவ்வழக்கில் 2 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான்.

(2) என்னுடைய சொத்தின் சர்வே எண்ணும் மோகன் ராஜ் சொத்தின் சர்வே எண்ணும் வெவ்வேறானது என்றால் சரிதான்.எனது சொத்தின் சர்வே எண் 54/1 என்றாலும் மோகன் ராஜ் சொத்தின் சர்வே எண் 56/5 என்றாலும் சரிதான். 532 சதுரஅடி சொத்திற்கு கீழ்புறமாக 5 அடி அகலம் மற்றும் 28 அடி நீளம் உள்ள ராஜலட்சுமிக்கு சொந்தமான பாதை உள்ளது என்றால் சரிதான். 532 சதுர அடி சொத்திற்கு வாயிலானது கிழக்கு நோக்கி உள்ளது என்றால் சரியல்ல. வடக்கு நோக்கி உள்ளது.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.24 18:02:31 +0530

(3) 532 சதுர அடி சொத்திற்கு கிழக்கிலும் ஒரு வாயில் உள்ளது என்றால் சரியல்ல. 532 சதுர அடி சொத்திற்கு வடக்கு பக்கத்தில் நான் கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். ரோட்டிற்கு தெற்கால் மற்றும் வீட்டிற்கு வடக்கால் இடைப்பட்ட இடத்தில் கடை உள்ளது . அது புறம் போக்குஇடம் ஆகும். 532 சதுர அடி மொத்தமும் எனது வீடு உள்ளது என்றால் சரிதான்.

(4) 532 சதுர அடி சொத்திற்கு வடக்கு பக்கம் வாயில் இருப்பதாக எடுத்துக்கொண்டால் கடை வழியாகத்தான் எனது வீட்டிற்கு செல்லவேண்டுமா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு வடபுறம் உள்ள கிழக்கு மேற்கு அகலம் என்ன என்றால் வடபுறம் 21 ½ அடி மற்றும் தென்புறம் 16 ½ அடி ஆகும். கடையின் அகலம் எவ்வளவு என்றால் கிழக்கு மேற்கு 11 ½ அடி ஆகும். நீளம் எவ்வளவு என்றால் 16 முதல் 17 அடி இருக்கும். மீதி 10 அடி கீழ்புறமாக உள்ளதா அல்லது மேற்புறம் உள்ளதா என்றால் கடைக்கு கிழக்கு பக்கம் உள்ளது. அது போக மேற்கு பக்கம் 3 அடி உள்ளது.

(5) மேற்சொன்ன கணக்கு படி பார்க்கும்போது வடபுறம் எனக்கு 24½ அடி வருகிறது என்றால் சரிதான். கடை இருக்கும் இடம் புறம் போக்கு இடமாகும். 532 சதுர அடிக்கு மீறி எனக்கு எந்த சொத்தும் கிடையாது என்றால் சரிதான். 532 சதுர அடி சொத்திற்கு அடுத்த தெற்கால் ராஜலட்சுமி வீடு என்று குறிப்பிட்டு இருக்க எனது மனைவிக்கு வழக்கு சொத்திற்கு தெற்கால் வீடு உள்ளது என்றால் சரிதான். 532 சதுர அடி சொத்திற்கு கீழ்புறம் உள்ள 5 அடி அகலம் கொண்ட சந்தின் வழியாகத்தான் ராஜலட்சுமி வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். ராஜலட்சுமி வீட்டிற்கு தெற்கே குளியல்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.24 18:02:37 +0530

அறை மற்றும் கழிப்பறை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து, ராஜலட்சுமியின் வீடு, 5 அடி பாதை மற்றும் ராஜலட்சுமி வீட்டிற்கு தெற்கே உள்ள குளியல் அறை மற்றும் கழிப்பறை அனைத்தும் சுந்தரமூர்த்தியிடம் தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை தவிர மேற்சொன்ன சொத்துக்கள் அனைத்தும் எப்போது கிரையம் பெற்றேன் என்றால் 2012 ல் சுந்தரமூர்த்தியிடம் கிரையம் பெற்றேன். மேற்சொன்ன சொத்துக்கள் அனைத்திற்கும் சர்வே எண் 54/1 என்றால் சரிதான்.

(6) தெற்கால் உள்ள ராஜலட்சுமியின் வீட்டிற்கு வாசல் எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. வழக்கு சொத்தான 532 சதுர அடி சொத்தில் 21 ½ முடியும் இடத்தில் தான் மேற்கால் வீட்டின் சுவர் என்றால் சரியல்ல. 14 ½ அடியில் வீடு உள்ளது. மேற்கு பக்கம் 7 அடி காலியாக உள்ளது. 14 ½ அடி என்பது ராஜலட்சுமிக்கு பாத்தியமான5 அடி சந்திற்கு பிறகு கிழக்கில் இருந்து மேற்காக வீடு ஆரம்பிக்ககிறது என்றால் சரிதான்.

(7) நான் இந்த வழக்கில் வழக்கு சொத்தினை அளக்க நீதிமன்ற ஆணையரை நியமிக்க உத்தரவு பெற்றேன் என்றால் சரிதான். நான் மேற்சொன்ன 14 ½ அடி மற்றும் 5 அடி விவரத்தை ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் நான் அதை பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையர் 21 ½ அடியில் தான் வீடு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றாலும் 14 ½ என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். நான் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

(8) வா.த.சா.ஆ 1 ல் மோகன்ராஜ் மனைக்கு கிழக்கு என்று சக்குபந்தியில்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.24 18:02:41 +0530

குறிப்பிட்டு இருக்க எனது இடத்திற்கு மேற்க்கு பக்கம் மோகன் ராஜ் இடம் என்றால் அவர்கள் அங்கு தான் குடியிருக்கிறார்கள் ஆனால் அது அவர்களது இடமா என்று எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ 1 ஆனது 02.05.2013 ல் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் இதில் மோகன் ராஜ் மனைக்கு கிழக்கு என்று சக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே மோகன் ராஜ்க்கு பாத்தியமான இடம் அங்கு இருந்ததால் தான் அவ்வாறு சக்குபந்தி குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

(9) மோகன் ராஜ் அந்த இடத்தினை 18.03.2013 ல் பாலசந்திரன் என்பவரிடத்தில் இருந்து கிரையம் பெற்றார் என்றால் வாங்கி இருக்கலாம். பாலசந்திரனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பாலசந்திரனும் மோகன்ராஜ் இருவரும் உறவினர்கள் என்றால் பங்காளிகள் ஆவார். வழக்கு சொத்திற்கு மேற்கே உள்ள இடம் மோகன் ராஜ் குடும்பத்திற்கு பூர்வீக சொத்து என்றால் எனக்கு தெரியாது. மோகன் ராஜ் வீடு வடபுறம் பார்த்த வீடு என்றால் சரிதான். அதுவும் புறம்போக்கு இடம் தான். மோகன்ராஜீம் அவர் வீட்டிற்கு வடபுறம் புறம்போக்கு இடம் வழியாகத்தான் வந்து செல்கிறார் என்றால் சரிதான்.

(10) மோகன் ராஜ் வீட்டிற்கும் தென்புறமாக அவரது தாயார் வசிக்கும் குடிசை வீடு உள்ளது என்றால் சரியல்ல. மாட்டு கொட்டகை தான் உள்ளது. மாட்டுகொட்டகைக்கு தென்புறம் அவரது குளியல் அறை மற்றும் கழிவறை உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த பின் கட்டப்பட்டது.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.24 18:02:45 +0530

மேற்சொன்ன அனைத்து சொத்துக்களிலும் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். மாட்டுகொட்டகைக்கு எப்படி செல்கிறார்கள் என்றால் அவரது வீட்டிற்கு கிழக்கால் உள்ள 21 அடி புறம்போக்கு இடம் வழியாக செல்கிறார். 21 அடி புறம்போக்கு நிலத்திற்கான சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது.

(11) நான் கூறுவது போல் 21 அடி அரசு புறம்போக்கு நிலம் என்று இருத்தால் எனது சக்குபந்தியில் அரசு புறம்போக்கு இடம் என்று குறிப்பிடாமல் மோகன் ராஜ் மனையை சக்குபந்தியில் காட்டியுள்ளேன் என்றால் எனது இடத்திற்கு மேற்கால் மோகன் ராஜ் இடம் தான் உள்ளது. வடக்கால் தான் அரசு புறம்போக்கு இடம் உள்ளது. எனது இடத்திற்கு மேற்கு புறம்போக்கு இடம் உள்ளதா என்றால் வழக்கு சொத்திற்கு மேற்கு எதுவும் இல்லை.

(12) நான் கூறும் 21 அடி அகலம் உள்ள அரசு புறம்போக்கு நிலம் எந்த பக்கம் உளள்து என்றால் எனது விட்டிற்கு வடபுறம் உள்ளது. பிரதிவாதிகள் வீட்டிற்கு வடபுறம் எவ்வளவு அடி நீளம் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது என்றால் 4 அடி நீளம் உள்ள அரசு புறம்போக்கு உள்ளது. சர்வேயர் வந்து அளக்கும்போது எந்த எந்த ஆவணங்களை வைத்து அளந்தார்கள் என்றால் எனது ஆவணங்கள் மற்றும் ராஜலட்சுமி ஆவணத்தை வைத்து அளந்தார்கள். மோகன்ராஜ் ஆவணங்களை வைத்து அளந்தார்களா என்றால் எனக்கு தெரியாது.

(13) நான் வழக்கு சொத்தினை அளக்கும்போது உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். இந்த வழக்கில் எனது பிராதுடன் ராஜலட்சுமியின் கிரைய

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.24 18:02:49 +0530

ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தனது எதிருரையுடன் அவருடைய கிரைய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ராஜலட்சுமியினுடைய கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யாத பட்சத்தில் அதை வைத்து அளந்தார்கள் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

(14) ராஜலட்சுமிக்கு பாத்தியமான சொத்தையும் பார்த்து தான் அளக்க வேண்டும் என்று நீதிமன்ற ஆணையருக்கு குறிப்பாணை ஏதும் கொடுத்தாரா என்றால் இல்லை. இவ்வழக்கில் இருமுறை நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு நிலத்தினை அளந்தார்கள் என்றாலும், இரண்டு அறிக்கையுமே நான் தாக்கல் செய்த மனுவில் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் அறிக்கை தவறு என்று நான் கூறியதன் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டு இரண்டாவது அறிக்கை தாக்கல் செய்யப்ட்டுள்ளது என்றால் சரிதான்.

(15) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் அடியாட்களுடன் வந்து வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றாலும் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளாதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் அவ்வாறு புகார் அளிக்கவில்லை.

(16) எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த முகாந்திரமும் கிடையாது

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.03.24 18:02:52 +0530

என்றாலும், பிரதிவாதிகளின் சொத்தின் மீது தவறாக உரிமை கொண்டாட இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

(17) எனது சொத்தின் சர்வே எண் மற்றும் பிரதிவாதிகளின் சொத்தின் சர்வே எண் வேறு என்றாலும் அவர் அத்துமீறி பிரவேசிக்கவில்லை என்றாலும் பிரதிவாதி தனது இடத்தை தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. இவை அனைத்தையும் மறைப்பதற்காக தான் ராஜலட்சுமி வீட்டின் கிரைய ஆவணங்களையும் அதற்கு தெற்கால் உள்ள குளியலறை மற்றும் கழிவறைக்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(18) எனது வழக்கு தள்ளுபடிக்குறியது என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று. மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.24 18:02:56 +0530

***Additional District Munsif , Cuddalore.***